இனிமையான குழந்தைகளே! தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவரான தந்தையிடம் உங்களுக்கு மிக-மிக அன்பு இருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்து முதல்-முதலில் சிவபாபா, காலை வணக்கம் எனச் சொல்லுங்கள்.

கேள்வி: மிகச்சரியான நினைவில் இருப்பதற்காக என்ன தாரணைகள் அவசியம்? மிகச்சரியான நினைவு உள்ளவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்: மிகச்சரியான நினைவிற்காக பொறுமை, கம்பீரத்தன்மை மற்றும் பாபாவைப் பற்றிப் புரிதல் வேண்டும். இந்த தாரணையின் ஆதாரத்தில் யார் நினைவு செய்கிறார்களோ, அவர்களின் நினைவு, (பாபாவின்) நினைவோடு சந்திக்கிறது. மேலும் பாபாவின் கரண்ட் (சக்தி) வரத்தொடங்குகிறது. அந்த சக்தியினால் ஆயுள் அதிகரிக்கும். ஆரோக்கியமாக ஆகிக் கொண்டே செல்வார்கள். இதயம் முற்றிலும் குளிர்ந்து விடும். ஆத்மா சதோபிரதானமாக ஆகிக் கொண்டே செல்லும்.

ஓம் சாந்தி. பாபா சொல்கிறார், இனிமையான குழந்தைகளே, ததத்வம், அதாவது ஆத்மாக்களாகிய நீங்களும் சாந்த சொரூபமானவர்கள். ஆத்மாக்கள் உங்கள் அனைவருடைய சுயதர்மமே சாந்தியாகும். சாந்திதாமத்திலிருந்து பிறகு இங்கே வந்து டாக்கியில் (சப்தத்திற்குள்) வருகிறீர்கள். இந்தக் கர்மேந்திரியங்கள் உங்களுடைய பார்ட்டை நடிப்பதற்காகக் கிடைத்துள்ளன. ஆத்மா சிறியது-பெரியதாக ஆவதில்லை. பாபா சொல்கிறார், நானோ சரீரதாரி அல்ல. நான் குழந்தைகளை நேரில் சந்திப்பதற்காக வரவேண்டி உள்ளது. ஒரு தந்தை இருக்கிறார், அவருக்குக் குழந்தைகள் பிறக்கின்றனர் என வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் குழந்தை இதுபோல் சொல்லாது - நான் பரந்தாமத்திலிருந்து வந்து ஜென்மம் எடுத்து தாய்-தந்தையைச் சந்திப்பதற்காக வந்துள்ளேன் என்று சொல்லாது. யாரேனும் ஒரு புதிய ஆத்மா யாருடைய சரீரத்திலாவது வருகிறது அல்லது யாராவது பழைய ஆத்மாவுக்குள் பிரவேசமாகிறது என்று சொன்னால் தாய்-தந்தையைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறேன் எனச் சொல்வதில்லை. அவர்களுக்குத் தானாகவே தாய்-தந்தையர் கிடைத்து விடுகின்றனர். இங்கே இது புதிய விஷயமாகும். பாபா சொல்கிறார், நான் பரந்தாமத்திலிருந்து வந்து குழந்தைகளாகிய உங்கள் முன்னிலையில் இருக்கிறேன். குழந்தைகளுக்கு மீண்டும் ஞானத்தைக் கொடுக்கிறேன். ஏனென்றால் நான் ஞானம் நிறைந்தவனாக, ஞானக்கடலாக.......... இருக்கிறேன். நான் வருவது குழந்தைகள் உங்களுக்குப் படிப்பு சொல்லித் தருவதற்காக. இராஜயோகத்தைக் கற்றுத் தருபவர் பகவான் தான். கிருஷ்ணரின் ஆத்மாவுக்கு இந்த ஈஸ்வரிய பாகம் கிடையாது. ஒவ்வொருவரின் பாகமும் தனித்தனியானது. ஆக, பாபா புரிய வைக்கிறார் - இனிய குழந்தைகளே, தன்னை ஆத்மா என உணருங்கள். இது போல் தன்னைப் புரிந்து கொள்வது எவ்வளவு இனிமையானதாக உள்ளது! நாம் என்னவாக இருந்தோம்? இப்போது என்னவாக ஆகிக் கொண்டிருக்கிறோம்?

இந்த டிராமா எப்படி அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளது! இதையும் நீங்கள் இப்போது புரிய வைக்கிறீர்கள். இது புருஷோத்தம சங்கமயுகம் என்பது மட்டும்

நினைவிருந்தால் கூட நாம் சத்யுகத்திற்கு செல்லப்போகிறவர்கள் என்பது ஆகி விடும். இப்போது சங்கமயுகத்தில் உள்ளோம். பிறகு நம்முடைய வீட்டுக்குச் செல்ல வேண்டும். அதனால் தூய்மையாகவோ அவசியம் ஆக வேண்டும். உள்ளுக்குள் மிகுந்த குஷி இருக்க வேண்டும். ஓஹோ! எல்லையற்ற தந்தை சொல்கிறார், இனிமையிலும் இனிமையான குழந்தைகளே, என்னை நினைவு செய்வீர்களானால் சதோபிரதானமாக ஆகி விடுவீர்கள். உலகத்தின் எஜமானர் ஆவீர்கள். பாபா குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு வைக்கிறார்! வெறுமனே ஆசிரியர் ரூபத்தில் படிப்பு சொல்லித் தந்து விட்டு வேறு வீட்டுக்குச் சென்று விடுவார் எனபதல்ல. இவரோ தந்தையாகவும் ஆசிரியராகவும் இருப்பவர். உங்களுக்குப் படிப்பு சொல்லித் தரவும் செய்கிறார். நினைவு யாத்திரையும் கற்றுத் தருகிறார்.

அதுபோல் உலகத்தின் எஜமானராக ஆக்குபவர், தூய்மையற்றவரை தூய்மையாக்குபவராகிய பாபாவிடம் மிகுந்த அன்பு இருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்ததுமே முதல்-முதலில் சிவபாபாவுக்கு குட் மார்னிங் (காலை வணக்கம்) சொல்ல வேண்டும். குட் மார்னிங் என்று கூறி நினைவு செய்வீர்களானால் மிகுந்த குஷியில் இருப்பீர்கள். குழந்தைகள் தங்கள் மனதைக் கேட்டுக் கொள்ள வேண்டும், நாம் அதிகாலையில் எழுந்து எல்லையற்ற தந்தையை எவ்வளவு நினைக்கிறோம்? மனிதர்கள் பக்தியும் கூட அதிகாலையில் செய்கின்றனர் இல்லையா? எவ்வளவு அன்போடு பக்தி செய்கின்றனர்! ஆனால் பாபா அறிவார், அநேகக் குழந்தைகள் இதயப் பூர்வமான அன்போடு நினைவு செய்வதில்லை. அதிகாலையில் எழுந்து பாபாவுக்கு குட் மார்னிங் சொல்ல வேண்டும், ஞான சிந்தனையிலேயே இருக்க வேண்டும். அப்போது குஷியின் அளவு அதிகரிக்கும். பாபாவுக்கு குட் மார்னிங் சொல்ல வில்லை என்றால் பாவச் சுமை எப்படி இறங்கும்? முக்கியமானது நினைவு. இதனால் வருங்காலத்திற்காக உங்களுக்கு மிகப் பெரும் வருமானம் சேமிப்பாகும். கல்ப-கல்பாந்தரமாக இந்த வருமானம் பயன்படும். மிகவும் பொறுமை, கம்பீரம் மற்றும் புரிதலுடன் நினைவு செய்ய வேண்டியுள்ளது. மேலோட்டமாக சொல்லி விடுகின்றனர், நான் பாபாவை அதிகம் நினைவு செய்கிறேன் என்று. ஆனால் சரியாக நினைவு செய்வதில் முயற்சி தேவை. யார் பாபாவை அதிகம் நினைவு செய்கிறார்களோ, அவர்களுக்கு சக்தி அதிகம் கிடைக்கிறது. ஏனென்றால் நினைவினால் நினைவு கிடைக்கின்றது. யோகம் மற்றும் ஞானம் இரண்டு பொருள்கள். யோகத்தின் சப்ஜெக்ட் வேறு, மிகப்பெரிய சப்ஜெக்ட். யோகத்தினால் தான் ஆத்மா சதோபிரதானம் ஆகின்றது. நினைவினால் அன்றி சதோபிரதானம் ஆவது முடியாதது. நல்லபடியாக அன்போடு பாபாவை நினைவு செய்வீர்களானால் தானாகவே சக்தி கிடைக்கும். ஆரோக்கியமாக ஆகி விடுவீர்கள். சக்தியினால் ஆயுளும் அதிகமாகும். குழந்தைகள் நினைவு செய்கின்றனர் என்றால் பாபாவும் சர்ச் லைட் (வழி) தருவார்.

இனிமையான குழந்தைகள் இதை உறுதியாக நினைவில் வைக்க வேண்டும் - சிவபாபா நமக்கு படிப்பு சொல்லித் தருகிறார். சிவபாபா பதீத பாவனராகவும் உள்ளார். சத்கதி அளிப்பவராகவும் உள்ளார். சத்கதி என்றால் சொர்க்கத்தின் இராஜபதவி தருகிறார். பாபா எவ்வளவு இனிமையானவர்! எவ்வளவு அன்போடு குழந்தைகளுக்கு அமர்ந்து கற்றுத் தருகிறார்! பாபா, தாதா மூலம் நமக்கு படிப்பு

சொல்லித் தருகிறார். பாபா எவ்வளவு இனிமையானவர்! எவ்வளவு அன்பு செய்கிறார்! எந்த ஒரு கஷ்டமும் கொடுப்பதில்லை. என்னை நினைவு செய்யுங்கள், சக்கரத்தை நினைவு செய்யுங்கள் என்று மட்டும் சொல்கிறார். பாபாவின் நினைவில் ஒரேயடியாக மனம் மூழ்கிவிட வேண்டும். ஒரு பாபாவின் நினைவு மட்டுமே இருந்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் பாபாவிடமிருந்து ஆஸ்தி எவ்வளவு பெரியதாகக் கிடைக்கிறது! தன்னைத் தான் பார்க்க வேண்டும், நமக்கு பாபா மீது எவ்வளவு அன்பு என்று. எது வரை நமக்குள் தெய்வீக குணங்கள் உள்ளன? ஏனென்றால் குழந்தைகள் நீங்கள் இப்போது முள்ளில் இருந்து மலராகிக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவுக்கெவ்வளவு யோகத்தில் இருக்கிறீர்களோ, அவ்வளவுக்கு முள்ளிலிருந்து மலராக, சதோபிரதானமாக ஆகிக் கொண்டே செல்வீர்கள். மலராக மாறி விட்டீர்கள் என்றால் பிறகு இங்கே இருக்க முடியாது. சொர்க்கம் என்பது மலர்களின் தோட்டமாகும். யார் அநேக முட்களை மலர்களாக மாற்று கிறார்களோ, அவர்களைத் தான் உண்மையான மணமுள்ள மலர்கள் எனச் சொல்வார்கள். அவர்கள் ஒரு போதும் யாரையும் முள்ளாகக் குத்த மாட்டார்கள். கோபம் கூட பெரிய முள்ளாகும். அநேகருக்குத் துக்கம்

தருவதாகும். இப்போது குழந்தைகள் நீங்கள் முட்களின் உலகத்தில் இருந்து விலகி மறு கரையில் வந்து அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் இருப்பது சங்கமயுகத்தில். எப்படி தோட்டக்காரர் மலர்களைத் தனியாக வெளியில் எடுத்து பாத்திரத்தில் வைக்கிறாரோ, அதே போல் மலர்களாகிய நீங்களும் கூட இப்போது சங்கமயுகம் என்ற பாத்திரத்தில் வைக்கப் பட்டிருக்கிறீர்கள். பிறகு மலர்கள் நீங்கள் சொர்க்கத்திற்குச் சென்று விடுவீர்கள். கலியுக முட்கள் சாம்பலாகி விடும்.

இனிமையான குழந்தைகள் அறிவீர்கள், பரலௌகீக் தந்தையிடமிருந்து நமக்கு அவிநாசி ஆஸ்தி கிடைக்கிறது. யார் உண்மையிலும் உண்மையான குழந்தைகளாக இருக்கிறார்களோ, பாப்தாதாவின் மீது முழுமையான அன்பு உள்ளதோ, அவர்களுக்கு மிகுந்த குஷி இருக்கும். நாம் உலகத்தின் எஜமானர் ஆகிறோம். ஆம், புருஷார்த்தத்தின் மூலம் தான் உலகத்தின் எஜமானர்கள் உருவாகிறார்கள். வெறுமனே சொல்வதால் அல்ல. யார் மிக முக்கியமான குழந்தைகளாக உள்ளனரோ, அவர்களுக்கு சதா இது நினைவிருக்கும், அதாவது நாம் நமக்காக மீண்டும் அதே சூரியவம்சி, சந்திரவம்சி இராஜதானியை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். பாபா சொல்கிறார், இனிமையான குழந்தைகளே, எவ்வளவு நீங்கள் அநேகருக்கு நன்மை செய்வீர்களோ, அவ்வளவு தான் உங்களுக்குப் பலன் கிடைக்கும். அநேகருக்கு வழி சொல்வீர்களானால் அநேகரின் ஆசிர்வாதம் கிடைக்கும். ஞான இரத்தினங்களால் பையை நிரப்பிக் கொண்டு பிறகு தானம் செய்ய வேண்டும். ஞானக்கடல் உங்களுக்கு இரத்தினங்களின் தட்டை நிரப்பி-நிரப்பிக் கொடுக்கிறார். யார் பிறகு தானம் செய்கின்றனரோ, அவர்கள் தாம் அனைவருக்கும் பிரியமானவர்களாக ஆகிறார்கள். குழந்தைகளுக்கு உள்ளுக்குள் எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! புத்திசாலிக் குழந்தைகளாக யார் இருக்கிறார்களோ, அவர்களோ சொல்வார்கள், நாங்கள் பாபாவிடமிருந்து முழுமையாக ஆஸ்தியைப் பெறுவோம் முற்றிலும் கூர்மையாக இருப்போம். பாபாவிடம் மிகுந்த அன்பு இருக்கும். ஏனென்றால் உயிர்மூச்சை அளிக்கும் பாபா

கிடைத்துள்ளார். ஞானத்தின் வரதானத்தை அதுபோல் தருகிறார், அதன் மூலம் நாம் எதிலிருந்து எதுவாக மாறி விடுகிறோம்! திவாலான நிலையிலிருந்து மிகப்பெரும் செல்வந்தராக ஆகி விடுகிறோம். அந்த அளவு நம் கஜானாவை நிரப்பி விடுகிறார். எவ்வளவு பாபாவை நினைவு செய்கிறீர்களோ, அவ்வளவு அன்பு இருக்கும், கவர்ச்சி ஏற்படும். ஊசி சுத்தமாக இருந்தால் காந்தத்தின் பக்கம் ஈர்க்கப் பட்டு விடும் இல்லையா? பாபாவின் நினைவினால் கறை நீங்கிக் கொண்டே போகும். ஒரு பாபாவைத் தவிர வேறு யாருடைய நினைவும் வரக்கூடாது. எப்படி மனைவிக்குக் கணவர் மீது எவ்வளவு அன்பு உள்ளது! உங்களுக்கும் கூட நிச்சயதார்த்தம் ஆகியிருக்கிறது இல்லையா? நிச்சயதார்த்தத்தின் குஷி குறைந்து விடுகிறதா என்ன? சிவபாபா சொல்கிறார், இனிமையான குழந்தைகளே, உங்களுக்கு என்னோடு நிச்சயதார்த்தம் ஆகியிருக்கிறது. பிரம்மாவோடு நிச்சதார்த்தம் இல்லை. நிச்சயதார்த்தம் உறுதி ஆகிவிட்டதென்றால் பிறகோ அவருடைய நினைவு தான் வந்து கொண்டிருக்க வேண்டும்.

பாபா புரிய வைக்கிறார், இனிமையான குழந்தைகளே, கவனக்குறைவாக இருந்து விடாதீர்கள். சுயதர்ஷன் சக்கரதாரி ஆகுங்கள். லைட் ஹவுஸ் ஆகுங்கள். சுயதர்ஷன் சக்கரதாரி ஆவதற்கான பயற்சி நல்லபடியாக ஆகி விடுமானால் பிறகு நீங்கள் ஞானக்கடல் போல் ஆகி விடுவீர்கள். எப்படி மாணவர்கள் படித்து ஆசிரியராக ஆகி விடுகின்றனர் இல்லையா? உங்களுடைய தொழிலே இது தான். அனைவரையும் சுயதர்ஷன் சக்கரதாரி ஆக்குங்கள். அப்போது தான் சக்கவர்த்தி இராஜா-இராணி ஆவீர்கள். அதனால் பாபா எப்போதும் குழந்தைகளிடம் கேட்கிறார் - சுயதர்ஷன் சக்கரதாரி ஆகி அமர்ந்திருக்கிறீர்களா? பாபாவும் சுயதர்ஷன் சக்கரதாரி இல்லையா? பாபா வந்திருக்கிறார், இனிமையான குழந்தைகளாகிய உங்களைத் திரும்ப அழைத்துச் செல்வதற்காக. குழந்தைகளாகிய நீங்கள் இல்லாமல் எனக்கும் கூட ஓய்வற்ற நிலையாகி விடுகிறது. எப்போது சமயம் வருகிறதோ, ஓய்வற்ற நிலை ஆகி விடுகிறது. சரி, இப்போது நாம் போக வேண்டும், குழந்தைகள் மிகவும் அழைக்கின்றனர். அதிக துக்கத்தில் உள்ளனர். இரக்கம் வருகின்றது. இப்போது குழந்தைகள் நீங்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டும். பிறகு அங்கிருந்து நீங்கள் தாங்களாகவே சுகதாமத்திற்குச் செல்வீர்கள். அங்கே நான் உங்களுக்குத் துணையாக வர மாட்டேன். தனது மன நிலையின் அனுசாரம் ஆத்மா சென்று விடும்.

குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த நஷா இருக்க வேண்டும், நாம் ஆன்மீகப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறோம். நாம் இறை மாணாக்கர்கள். நாம் மனிதரிலிருந்து தேவதையாக அல்லது உலகத்தின் எஜமானர் ஆவதற்காகப் படித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் நாம் அமைச்சரவையின் துறைகள் அனைத்திலும் பாஸாகி விடுகிறோம். ஆரோக்கியத்திற்கான கல்வியும் கற்கிறோம். பண்புகளைச் சீர்திருத்துவதற்கான ஞானத்தையும் கற்கிறோம். சுகாதார அமைச்சகம், நில அமைச்சகம், கட்டட அமைச்சகம் அனைத்தும் இதில் வந்து விடுகின்றன.

இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு பாபா அமர்ந்து புரிய வைக்கிறார், எப்போது ஏதேனும் சபையில் சொற்பொழிவு செய்கிறீர்களோ,

அல்லது யாருக்காவது புரிய வைக்கிறீர்களோ, அப்போது அடிக்கடி சொல்லுங்கள், தன்னை ஆத்மா என உணர்ந்து பரமபிதா பரமாத்மாவை நினைவு செய்யுங்கள். இந்த நினைவின் மூலம் தான் உங்கள் விகர்மங்கள் விநாசமாகும். நீங்கள் பாவனமாகி விடுவீர்கள். அடிக்கடி இந்த நினைவு செய்ய வேண்டும். ஆனால் எப்போது நீங்களும் பாபா நினைவில் இருக்கிறீர்களோ, அப்போது தான் இதை மற்றவர்களுக்குச் சொல்ல முடியும். இவ்விஷயத்தில் குழந்தைகளுக்கு அதிக பலவீனம் உள்ளது. உள்ளுக்குள் குழந்தைகளாகிய உங்களுக்குக் குஷி இருக்கும். நினைவில் இருந்தால் தான் மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்கான தாக்கம் இருக்கும். நீங்கள் பேசுவது அதிகம் இருக்கக் கூடாது. ஆத்ம அபிமானி ஆகிக் கொஞ்சம் புரிய வைத்தாலும் கூட புத்தியில் நன்கு பதியும். பாபா சொல்கிறார், குழந்தைகளே, நடந்து முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும். இப்போது முதலில் உங்களைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள். தான் நினைவு செய்வதில்லை, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இந்த ஏமாற்று செல்லுபடியாகாது. உள்ளுக்குள் மனம் நிச்சயமாக அரித்துக் கொண்டே இருக்கும். பாபாவிடம் முழு அன்பு இல்லையென்றால் ஸ்ரீமத்படி நடப்பதில்லை. எல்லையற்ற தந்தையைப் போலவோ வேறு யாரும் கற்றுத்தர முடியாது. பாபா சொல்கிறார், இனிமையான குழந்தைகளே, இந்தப் பழைய உலகத்தை இப்போது மறந்து விடுங்கள். கடைசியிலோ இவையனைத்தையும் மறந்தேயாக வேண்டும். புத்தி தன்னுடைய சாந்திதாமம் மற்றும் சுகதாமத்தின் மீது ஈடுபட்டு விடுகின்றது. பாபாவை நினைவு செய்து-செய்தே பாபாவிடம் சென்றுவிட வேண்டும். பதீத் ஆத்மாவோ செல்ல முடியாது. அதுவே பாவன ஆத்மாக்களின் வீடு. இந்த சரீரம் 5 தத்துவங்களால் ஆனது. ஆக, 5 தத்துவங்கள் இங்கே இருப்பதற்காக ஈர்க்கின்றன. ஏனென்றால் ஆத்மா இதை சொத்தாக எடுத்துக் கொண்டுள்ளது. இப்போது இதன் மீது வைத்த மோகத்தை விட்டு வீட்டுக்குச் சென்றுவிட வேண்டும். அங்கோ இந்த 5 தத்துவங்கள் கிடையாது. சத்யுகத்திலும் கூட சரீரம் யோகபலத்தினால் உருவாகின்றது. சதோபிரதான இயற்கை உள்ளது. அதனால் ஈர்ப்பதில்லை. துக்கம் ஏற்படுவதில்லை. இவை புரிந்து கொள்வதற்கான மிகவும் நுட்பமான விஷயங்கள் ஆகும். இங்கே 5 தத்துவங்களின் பலம் ஆத்மாவை ஈர்க்கின்றது. அதனால் சரீரத்தை விடுவதற்கான மனம் இருப்பதில்லை. இல்லையென்றால் இதில் இன்னும் கூட குஷியடைய வேண்டும். பாவனமாகி சரீரத்தை அப்படியே விட்டுவிடுவீர்கள், வெண்ணெயில் இருந்து முடி வெளிவருவது போல. ஆக, சரீரத்திலிருந்து, அனைத்துப் பொருட்களிடமிருந்து மோகத்தை முற்றிலும் நீக்கிவிட வேண்டும். இதனுடன் நமக்கு எந்த ஒரு தொடர்பும் கிடையாது. அவ்வளவு தான், நாம் போகிறோம் பாபாவிடம். இவ்வுலகில் தன்னுடைய பெட்டி-படுக்கைகளைத் தயார் செய்து முன்கூட்டியே அனுப்பியாயிற்று. கூடவோ செல்ல முடியாது. மற்றப்படி ஆத்மாக்கள் தாம் செல்ல வேண்டும். சரீரத்தையும் இங்கே விட்டாயிற்று. பாபா புதிய சரீரத்தின் சாட்சாத்காரம் செய்வித்துள்ளார். வைரம்-வைடூரியங்களின் மாளிகை கிடைத்து விடும். அதுபோன்ற சுகதாமத்திற்குச் செல்வதற்காக எவ்வளவு முயற்சி செய்ய வேண்டும்! களைத்துப் போகக் கூடாது. இரவும் பகலும் அதிக வருமானத்தைச் சம்பாதிக்க வேண்டும். அதனால் பாபா சொல்கிறார், உறக்கத்தை வெல்லக் கூடிய குழந்தைகளே! என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். மேலும் விசார் சாகர் மந்தன் செய்யுங்கள். டிராமாவின் இரகசியத்தைப் புத்தியில் வைப்பதால் புத்தி முற்றிலும் குளிர்ந்து விடும். மகாரதி குழந்தைகள் என்றால் ஒருபோதும் ஆட மாட்டார்கள்.

சிவபாபாவை நினைவு செய்வீர்களானால் அவர் பாதுகாக்கவும் செய்வார்.

பாபா குழந்தைகளாகிய உங்களை துக்கத்திலிருந்து விடுவித்து சாந்தியின் தானம் கொடுக்கிறார். நீங்களும் மற்றவர்களுக்கு சாந்தியின் தானம் கொடுக்க வேண்டும். இது உங்களுடைய எல்லையற்ற சாந்தி. அதாவது யோகபலம் மற்றவர்களையும் முற்றிலும் சாந்தமாக்கி விடும். உடனே தெரிய வரும், இவர் நம்முடைய வீட்டைச் (தர்மத்தை) சேர்ந்தவரா, இல்லையா? ஆத்மாவுக்கு உடனே கவர்ச்சி ஏற்படும், இவர் நம்முடைய பாபா. நாடியையும் பார்க்க வேண்டியுள்ளது. பாபாவின் நினைவில் இருந்து பிறகு பாருங்கள், இந்த ஆத்மா நமது குலத்தைச் சேர்ந்தவரா? அப்படி இருப்பாரானால் முற்றிலும் சாந்தமாகி விடுவார். யார் இந்தக் குலத்தைச் சேர்ந்தவராக இருப்பார்களோ, அவர்களுக்குத் தான் இவ்விஷயங்களில் இரசனை வரும். குழந்தைகள் நினைவு செய்கின்றனர் என்றால் பாபாவும் அன்பு செலுத்துவார். ஆத்மாவுக்கு அன்பு செலுத்தப்படுகின்றது. இதையும் அறிவீர்கள், யார் அதிக பக்தி செய்திருக்கிறார்களோ, அவர்கள் தான் அதிகம் படிப்பார்கள். அவர்களின் முகத்திலிருந்து தெரிய வரும், இவர்களுக்கு பாபா மீது எவ்வளவு அன்பு உள்ளது என்று! ஆத்மா தந்தையைப் பார்க்கின்றது. தந்தை ஆத்மாக்களாகிய நமக்குப் படிப்பு சொல்லித் தந்து கொண்டிருக்கிறார். பாபாவும் புரிந்திருக்கிறார், நாம் இவ்வளவு மிகச்சிறிய ஆத்மாவுக்குப் படிப்பு சொல்லித் தருகிறோம். இன்னும் போகப்போக உங்களுக்கும் இந்த மனநிலை அமைந்துவிடும். நாம் சகோதரன்-சகோதரனுக்குக் கற்றுத் தருகிறோம் என்று. முகம் சகோதரியினுடையதாக இருந்தாலும் திருஷ்டி ஆத்மாவின் பக்கம் செல்ல வேண்டும். சரீரத்தின் பக்கம் முற்றிலும் செல்லவே கூடாது. இதில் மிகுந்த முயற்சி உள்ளது. இவை மிகவும் நுட்பமான விஷயங்களாகும். மிக உயர்ந்த படிப்பாகும். எடை போட்டுப் பார்ப்பீர் களானால் இந்தப் படிப்பின் பக்கம் அதிக பாரம் ஆகி விடும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

ஓம் சாந்தி. குழந்தைகள் இந்தப் பாடலைக் கேட்டீர்கள், வேறு எந்த சத்சங்கத்திலும் எப்போதும் இசைத்தட்டை (ரிகார்டு) வைத்து புரிய வைப்பதில்லை. அங்கே சாஸ்திரத்தை சொல்கின்றனர். குருத்துவாரத்தில் (சீக்கியர் கோவில்) கிரந்தத்தி-ருந்து இரண்டு வசனங்களை எடுத்துக் கொள்கின்றனர், பின்னர் கதை சொல்பவர்கள் அமர்ந்து அதனை விஸ்தரிக்கின்றனர். ரிகார்டை வைத்துப் புரியவைப்பது எங்கும் நடப்பதில்லை. இவையனைத்தும் பக்தி மார்க்கத்தின் பாடல்களாகும் என்று தந்தை இப்போது புரிய வைக்கிறார். குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது, ஞானம் தனிப்பட்டது, அது ஒரு நிராகார சிவனிடமிருந்துதான் கிடைக்கும். இதற்கு ஆன்மீக ஞானம் என்று சொல்லப்படுகிறது. ஞானம் பல விதமாக உள்ளதல்லவா! இந்த கம்பளம் எப்படி உருவாகிறது என்ற ஞானம் (செய்முறை விவரம்) உங்களுக்கு உள்ளதா என்று கேட்கப்படலாம். ஒவ்வொரு பொருளைக் குறித்தும் ஞானம் (உருவாக்கம் பற்றிய விளக்கம்) இருக்கிறது. அவை ஸ்தூலமான விசயங்கள். ஆத்மாக்களாகிய நம் அனைவருக்கும் ஒரு ஆன்மீகத்

தந்தை அவர் ஒருவரே என்று குழந்தைகள் அறிவார்கள். அவருடைய உருவம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அந்த நிராகாரரின் சித்திரம் (உருவம்) கூட சாலிக்கிராமம் (குழந்தைகளைப்) போன்றதே. அவரைத்தான் பரமாத்மா என்று கூறுகின்றனர். அவர்தான் நிராகாரமானவர் என்று கூறப்படுகிறார். மனிதரைப் போன்ற சரீரம் கிடையாது. அனைத்து பொருட்களுக்கும் உருவம் கண்டிப்பாக இருக்கிறது. அவையனைத்திலும் சிறியதிலும் சிறியதான உருவம் ஆத்மாவுடையதாகும். அதனை இயற்கை என்றே சொல்வார்கள் ஆத்மா மிகவும் சிறியது, அதனை இந்தக் கண்களால் பார்க்க முடிவதில்லை. குழந்தைகளாகிய உங்களுக்கு திவ்ய திருஷ்டி கிடைக்கிறது, அதன் மூலம் அனைத்தும் காட்சிகளாகத் தெரிகிறது. எது கடந்த காலமாக ஆகிவிட்டதோ அது திவ்ய திருஷ்டியின் மூலம் பார்க்கப்படுகிறது. முதல் நம்பரில் இவர் கடந்து சென்றவர் ஆகி விட்டார். இப்போது மீண்டும் வந்துள்ளார் எனும்போது அவருடைய காட்சியும் தெரிகிறது. மிகவும் சூட்சுமமானது. பரமபிதா பரமாத்மாவைத் தவிர ஆத்மாவின் ஞானம் வேறு யாரும் கொடுக்க முடியாது என்பது இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். மனிதர்கள் ஆத்மாவை சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை, அதேபோல பரமாத்மாவையும் கூட சரியாகத் தெரிந்து கொள்ள முடியாது. உலகில் மனிதர்களின் வழிகள் பல இருக்கின்றன. சிலர் ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகி விட்டது என்று சொல்கின்றனர், சிலர் வேறு எதையோ சொல்கின்றனர். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள், அதுவும் வரிசைக்கிரமமான முயற்சியின்படி, அனைவரின் புத்தியிலும் ஒன்று போல பதிய முடியாது. அடிக்கடி புத்தியிலும் பதிய வைக்கப்படுகிறது. நாம் ஆத்மாக்கள், ஆத்மாதான் 84 பிறவிகளின் நடிப்பை நடிக்க வேண்டும். தன்னை ஆத்மா எனப் புரிந்து கொண்டு பரமபிதா பரமாத்மாவாகிய என்னைத் தெரிந்து கொண்டு நினைவு செய்யுங்கள் என இப்போது தந்தை சொல்கிறார். நான் இவருக்குள் பிரவேசமாகி குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் கொடுக்கிறேன் என்று தந்தை கூறுகிறார். குழந்தைகளாகிய நீங்கள் தன்னை ஆத்மா என புரிந்துக் கொள்வதில்லை, அதனால் உங்கள் பார்வை சரீரத்தின் மீது சென்று விடுகிறது. உண்மையில் உங்களுக்கு இவரிடம் (பிரம்மாவிடம்) எந்த வேலையும் இல்லை. அனைவருக்கும் சத்கதி வழங்கும் வள்ளல் அந்த சிவபாபா ஆவார், அவரது வழிப்படி நம் அனைவருக்கும் சுகத்தைக் கொடுக்கிறார். யார் தந்தையை முழுமையாக நினைவு செய்வ தில்லையோ அவர்களிடமிருந்து அவகுணங்கள் நீங்குவதே இல்லை. தன்னை ஆத்மா என நிச்சயப்படுத்திக் கொள்வதில்லை. மனிதர்கள் ஆத்மாவையும் தெரிந்து கொள்வதில்லை, பரமாத்மாவையும் தெரிந்து கொள்வதில்லை. சர்வவியாபி (எங்கும் நிறைந்தவர்) என்ற ஞானத்தையும் கூட பாரதவாசிகள் தான் பரப்பினார்கள். உங்களிலும் கூட சேவை செய்யத் தகுந்த குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர், மற்ற அனைவரும் அவ்வளவாகப் புரிந்து கொள்வதில்லை. தந்தையின் முழுமையான அறிமுகம் இருந்தது என்றால் தந்தையை நினைவு செய்வார்கள், தனக்குள் தெய்வீக குணங்களை தாரணை செய்வார்கள்.

சிவபாபா குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கிறார். இவை புதிய விஷயங்கள் ஆகும். பிராமணர்கள் கூட கண்டிப்பாகத் தேவை. பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகளாக எப்போது ஆகிறார்கள் என்பது உலகில் யாருக்கும் தெரியாது. அளவற்ற பிராமணர்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்கள்

வயிற்றின் வழி வம்சாவளியினர் ஆவர். அவர்கள் பிரம்மாவின் வாய்வழி வம்சாவளி குழந்தைகள் அல்ல. பிரம்மாவின் குழந்தைகளுக்கு ஈஸ்வரனாகிய தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. இப்போது உங்களுக்கு ஆஸ்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது அல்லவா! பிராமணர்களாகிய நீங்கள் வேறு, அவர்கள் வேறு. பிராமணர்களாகிய நீங்கள் இருப்பதே சங்கம யுகத்தில். அவர்கள் இருப்பது துவாபர கலியுகங்களில். இந்த சங்கம யுக பிராமணர்களே வேறு. பிரஜாபிதா பிரம்மாவின் அளவற்ற குழந்தைகள். எல்லைக்குட்பட்ட தந்தையைக் கூட பிரம்மா என்று சொல்வோம், ஏனெனில் குழந்தைகளைப் பெறுகிறார். ஆனால் அது ஸ்தூல விஷயமாகும். இந்த தந்தை சொல்கிறார் - அனைத்து ஆத்மாக்களும் எனது குழந்தைகள் ஆவார்கள். நீங்கள் இனிமையிலும் இனிமையான ஆன்மீகக் குழந்தைகள். இது யாருக்கு வேண்டு மானாலும் புரிய வைப்பது எளிதாகும். சிவபாபாவுக்கு தனது சரீரம் கிடையாது. சிவ ஜெயந்தி கொண்டாடுகின்றனர், ஆனால் அவரது சரீரத்தைப் பார்க்க முடிவதில்லை. மற்ற அனைவருக்கும் சரீரம் இருக்கிறது. அனைத்து ஆத்மாக்களுக்கும் தத்தமது சரீரம் இருக்கிறது. சரீரத்திற்குப் பெயர் வைக்கப்படுகிறது, பரமாத்மாவுக்கு தமது சரீரம் கிடையாது, ஆகவே அவர் பரம ஆத்மா என்று சொல்லப்படுகிறார். அவருடைய ஆத்மாவுக்குத்தான் சிவன் என்ற பெயர் உள்ளது. அது ஒருபோதும் மாறுவதில்லை. சரீரம் மாறும் போது, பெயர்களும் மாறி விடுகின்றன. சிவபாபா சொல்கிறார் - நான் எப்போதும் நிராகார பரம ஆத்மாவாகத்தான் இருக்கிறேன். நாடகத்தின் திட்டத்தின்படி இந்த சரீரம் எடுத்திருக்கிறேன். சன்னியாசிகளின் பெயர்கள் கூட மாறியபடி இருக்கும். குருவினுடையவர் ஆகும்போது பெயர் மாறுகிறது. உங்களின் பெயரும் கூட மாறியது. ஆனால் எதுவரை பெயர் மாறிக் கொண்டே இருக்கும்? எவ்வளவு பேர் ஓடிப்போனவராகி விட்டனர்! அந்த சமயத்தில் இருந்தவர்களுக்கு பெயர்கள் இடப்பட்டன. இப்போது பெயர் வைப்பதில்லை. யார் மேலும் நம்பிக்கை இல்லை. மாயை பலரை தோற்கடித்து விடுகிறது, அப்போது ஓடி விடுகின்றனர், ஆகையால் பாபா யாருக்கும் பெயர் வைப்பதில்லை. சிலருக்கு வைப்பது, சிலருக்கு வைக்காமல் இருப்பது, அதுவும் சரியல்ல. பாபா, நாங்கள் உங்களுடையவர்களாக ஆகி விட்டோம் என்று சொல்கிறார்கள், ஆனால் சரியான விதத்தில் என்னுடையவர்களாக ஆவதில்லை. வாரிசு ஆவதன் இரகசியமும் கூட தெரியாதவர்கள் நிறைய பேர் உள்ளனர். பாபாவை சந்திக்க வருகின்றனர், ஆனால் வாரிசுகள் அல்ல. வெற்றி மாலையில் வர முடியாது. நாம் வாரிசுகள் என சில நல்ல நல்ல குழந்தைகள் புரிந்திருக்கின்றனர். ஆனால் இவர் வாரிசு அல்ல என்று பாபா புரிந்து கொள்கிறார். வாரிசு ஆவதற்காக பகவானை தன் வாரிசு ஆக்க வேண்டும், இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்வதும் கஷ்டமாகும். வாரிசு என்று யார் புரிந்து கொள்ளப்படுகின்றனர் என்பதை பாபா புரிய வைக்கிறார். பகவானை யாராவது வாரிசாக ஆக்கிக் கொண்டால் ஆஸ்தி கொடுக்க வேண்டும். அப்போது பிறகு தந்தை தன் வாரிசாக ஆக்குவார். ஆஸ்தியை ஏழைகளைத் தவிர எந்த பணக்காரரும் தர முடியாது. மாலை எவ்வளவு குறைவானவர்களுடையதாக உருவாகிறது! இதைக்கூட யாராவது பாபாவிடம் கேட்டால் பாபா சொல்ல முடியும் - நீங்கள் வாரிசு ஆவதற்கான உரிமை உள்ளவரா அல்லது இல்லையா? இந்த பாபாவும் கூட சொல்ல முடியும். இது புரிந்து கொள்ளக் கூடிய பொதுவான விஷயம் ஆகும். வாரிசு ஆவதிலும் கூட மிகவும் புத்தி தேவை. இலட்சுமி நாராயணர் உலகின் எஜமானர்களாக இருந்தனர், ஆனால் இந்த எஜமான் தன்மையை எப்படி

அடைந்தனர் என்பதை யாரும் அறிவதில்லை. இப்போது உங்களின் இலட்சியம், குறிக்கோள் முன்னால் உள்ளது. நீங்கள் இப்படி ஆக வேண்டும் என்று. குழந்தைகள் சொல்வார்கள் நாங்கள் சூரிய வம்சத்து இலட்சுமி-நாராயணராக ஆகப் போகிறோம், சந்திர வம்சத்து இராமன் - சீதையாக அல்ல. இராமன் சீதையை சாஸ்திரங்களில் இழிவாக செய்து விட்டனர். இலட்சுமி நாராயணரை ஒரு போதும் தவறாகக் கூறியதைப் பற்றி கேள்விப்பட்டதில்லை. சிவபாபா மற்றும் கிருஷ்ணருக்கும் கூட நிந்தனை செய்யப்பட்டது. நான் குழந்தைகளாகிய உங்களை இந்த அளவு உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களாக ஆக்குகிறேன் என்று தந்தை கூறுகிறார். என்னை விடவும் குழந்தைகள் வேகமாக சென்று விடுகின்றனர். இலட்சுமி நாராயணரை யாரும் நிந்தனை செய்ய மாட்டார்கள். கிருஷ்ணரின் ஆத்மா அதேதான், ஆனால் தெரியாத காரணத்தால் நிந்தனை செய்து விட்டனர். இலட்சுமி நாராயணரின் கோவில் கூட மிகவும் குஷியுடன் கட்டுகின்றனர். உண்மையில் இராதா-கிருஷ்ணருடைய கோவில் கட்ட வேண்டும், ஏனென்றால் அவர்கள் சதோபிரதானமாக இருந்தவர்கள். இவர்களின் (இலட்சுமி நாராயணர்) இளமைப் பருவத்தை சதோ என்கிறோம். அவர்கள் சிறியவர்கள், ஆகவே சதோபிரதானம் என்று கூறுவோம். சிறிய குழந்தை மஹாத்மாவுக்கு சமமாக இருக்கும். சிறிய குழந்தைகளுக்கு விகாரத்தைப் பற்றி தெரியாதது போல அங்கே பெரியவர்களுக்குக் கூட விகாரம் என்றால் என்ன என்பதே தெரியாது. இந்த 5 பூதங்கள் அங்கே இருப்பதே இல்லை. விகாரங்களைப்பற்றி தெரியவே தெரியாது. இந்த சமயம் இரவாக உள்ளது. காம விகாரத்தின் அங்க சேஷ்டை இரவில்தான் நடக்கிறது. தேவதைகள் இருப்பது (பகலில்) சொர்க்கம் சத்யுகம் என்பதால் காமத்தின் சேஷ்டை இருப்பதில்லை. எந்த விகாரமும் இருக்காது. இப்போது இரவில் இராவண இராஜ்யம் அனைவரும் விகாரிகளாக இருக்கின்றனர். சத்யுகம் வந்தாலே நம் அனைத்து விகாரங்களும் சென்று விடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். விகாரம் என்பது என்ன பொருள் என்பதே தெரிந்திருக்காது. இவை இராவணனின் விகார குணங்களாகும். இது விஷம் நிறைந்த உலகமாகும். நிர்விகாரி உலகில் விகாரத்தின் எந்த விஷயமும் இருக்காது. அது ஈஸ்வரிய இராஜ்யம் என்றுதான் சொல்லப்படுகிறது. இப்போது இருப்பது அசுர இராஜ்யம். இது யாருக்கும் தெரியாது. நீங்கள் வரிசைக்கிரமமான முயற்சியின்படி அனைத்தும் அறிவீர்கள். அளவற்ற குழந்தைகள் இருக்கின்றனர். இந்த அனைத்து பி.கு. - களும் யாருடைய குழந்தைகள் என்பதை எந்த மனிதரும் புரிந்து கொள்ள முடியாது.

அனைவரும் சிவபாபாவை நினைவு செய்கின்றனர், பிரம்மாவைக் கூட நினைப்பதில்லை. இவர் (பிரம்மா) தாமே சொல்கிறார் - சிவபாபாவை நினைவு செய்யுங்கள், அவர் மூலம் பாவ கர்மங்கள் அழியும், வேறு யாரை நினைவு செய்தாலும் பாவ கர்மங்கள் அழியாது. என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று கீதையிலும் சொல்லப்பட்டுள்ளது. கிருஷ்ணர் சொல்ல முடியாது. ஆஸ்தி கிடைப்பதே நிராகார தந்தையிடமிருந்துதான். தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளும்போது சிவ பாபாவை நினைவு செய்ய முடியும். நான் ஆத்மா என்பதை உறுதியாக நிச்சயப் படுத்த வேண்டும். எனது தந்தை பரமாத்மா ஆவார், அவர் சொல்கிறார் - என்னை நினைவு செய்தால் நான் உங்களுக்கு ஆஸ்தி கொடுப்பேன். நான் அனைவருக்கும் சுகம் கொடுக்கிறேன். நான் அனைத்து ஆத்மாக்களையும் சாந்தி தாமம் அழைத்துச் செல்கிறேன். யார்

கல்பத்திற்கு முன்பு தந்தையிடமிருந்து ஆஸ்தி எடுத்திருப்பார்களோ அவர்கள்தான் இப்போதும் வந்து ஆஸ்தியை எடுப்பார்கள், பிராமணர்கள் ஆவார்கள். பிராமணர்களிலும் சில குழந்தைகள் உறுதியானவர்களாக இருக்கின்றனர். சொந்த தாயின் குழந்தைகளாகவும் ஆவார்கள், மாற்றாந்தாய் குழந்தையாகவும் ஆவார்கள். நாம் நிராகார சிவபாபாவின் வம்சாவளி ஆவோம். வம்சம் எப்படி பெருகிக் கொண்டு போகும் என்பதை அறிவோம். இப்போது பிராமணர் ஆன பிறகு நாம் திரும்பிச் செல்ல வேண்டும். அனைத்து ஆத்மாக்களும் சரீரத்தை விட்டு விட்டு திரும்பிச் செல்ல வேண்டும். பாண்டவர்கள், கௌரவர்கள் என இரு சாராரும் சரீரத்தை விட வேண்டும். நீங்கள் இந்த ஞானத்தின் சம்ஸ்காரத்தை எடுத்துச் செல்கிறீர்கள், பிறகு அதன் அடிப்படையில் பலன் கிடைக்கிறது. அதுவும் நாடகத்தில் பதிவாகி உள்ளது, பிறகு ஞானத்தின் நடிப்பு முடிந்து விடுகிறது. உங்களுக்கு 84 பிறவிகளுக்குப் பிறகு ஞானம் கிடைத்திருக்கிறது. பிறகு இந்த ஞானம் மறைந்து விடுகிறது. நீங்கள் பலனை அனுபவிக்கிறீர்கள். அங்கே வேறு எந்த தர்மத்தைச் சேர்ந்தவர்களுடைய படங்கள் முதலானவை இருக்காது. உங்களுடைய படங்கள் பக்தி மார்க்கத்தில் கூட இருக்கும். சத்யுகத்தில் யாருடைய படமும் இருக்காது, தேவி தேவதைகள் மட்டுமே இருப்பார்கள். பின்னர் சிருஷ்டி வளர்ந்தபடி செல்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் இந்த ஞானத்தை சிந்தனை செய்து அதீந்திரிய சுகத்தில் (இந்திரியங் களுக்கு அப்பாற்பட்ட சுகத்தில்) இருக்க வேண்டும். நிறைய (ஞான) விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் மாயை அடிக்கடி மறக்கடித்து விடுகிறது என பாபா புரிந்து கொள்கிறார். ஆக, சிவபாபா நமக்கு படிப்பிக்கிறார் என்ற நினைவு இருக்க வேண்டும். அவர் உயர்ந்ததிலும் உயர்ந்தவர். நாம் இப்போது வீடு திரும்ப வேண்டும். எவ்வளவு சகஜமான விஷயங்கள்! அனைத்து ஆதாரம் நினைவில் உள்ளது. நாம் தேவதை ஆக வேண்டும். தெய்வீக குணங்களும் தாரணை செய்ய வேண்டும். 5 விகாரங்கள் பூதங்கள் போன்றவை. காமம் எனும் பூதம், கோபத்தின் பூதம், தேக அபிமானத்தின் பூதமும் இருக்கின்றன. ஆம், சிலருக்குள் அதிகமான பூதங்கள் இருக்கின்றன, சிலருக்குள் குறைவாக இருக்கின்றன. இவை 5 பெரிய பூதங்கள் என பிராமண குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். முதல் நம்பர் காமம் எனும் பூதம், இரண்டாவது கோபம் எனும் பூதம். யாராவது கரடு முரடாகப் பேசினால், இவர் கோபம் மிக்கவர் என்று தந்தை சொல்கிறார். இந்த பூதம் வெளியேற வேண்டும். ஆனால் பூதம் வெளியேறுவது மிகவும் கஷ்டமாக உள்ளது. கோபம் ஒருவர் மற்றவருக்கு துக்கம் கொடுக்கிறது. பற்றுதலில் பலருக்கு துக்கம் ஏற்படாது. யாருக்கு பற்று இருக்கிறதோ அவருக்குத்தான் துக்கம் ஏற்படும். ஆகையால் இந்த பூதங்களை விரட்டுங்கள் என்று தந்தை புரிய வைக்கிறார்.

ஒவ்வொரு குழந்தையும் விசேஷமாக படிப்பு மற்றும் தெய்வீக குணங்கள் மீது கவனம் கொடுக்க வேண்டும். பல குழந்தைகளுக்குள் கோபத்தின் அம்சம் கூட இருப்பதில்லை. சிலரோ கோபத்தில் வந்து மிகவும் சண்டை போடுகின்றனர். நாம் தெய்வீக குணங்களை தாரணை செய்து தேவதை ஆக வேண்டும் என குழந்தைகள் சிந்தனை செய்ய வேண்டும். ஒருபோதும் கோபத்துடன் பேசக்கூடாது. யாராவது கோபித்துக் கொண்டால் இவருக்குள் கோபம் எனும் பூதம் உள்ளது எனப் புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் பூதநாதன் - பூத நாயகி ஆகி விடுகின்றனர், இப்படிப்பட்ட பூதம் உள்ளவர்களுடன் ஒருபோதும் பேசக் கூடாது.

ஒருவர் கோபத்தில் வந்து பேசினார், பிறகு மற்றவருக்குள்ளும் கூட பூதம் வந்து விட்டால் பூதங்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும். பூத நாயகி எனும் வார்த்தை மிகவும் அசிங்கமாக உள்ளது. பூதத்தின் பிரவேசம் ஆகி விடக் கூடாது, ஆகையால் மனிதர்கள் ஒதுங்கிக் கொள்கின்றனர். பூதத்திற்கு முன்பாக நிற்கவும் கூடாது. இல்லாவிட்டால் பிரவேசம் ஆகி விடும். தந்தை வந்து அசுர குணங்களை நீக்கி தெய்வீக குணங்களை தாரணை செய்விக்கிறார். தெய்வீக குணங்களை தாரணை செய்வித்து தேவதையாக ஆக்குவதற்காக நான் வந்துள்ளேன் என தந்தை சொல்கிறார். நாம் தெய்வீக குணங்களை தாரணை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை குழந்தைகள் அறிவார்கள். தேவதைகளின் படங்கள் முன்னால் உள்ளன. கோபம் கொள்பவர்களிடமிருந்து ஒரேயடியாக ஒதுங்கி விடுங்கள் என்று பாபா புரிய வைத்திருக்கிறார். தம்மைப் பாதுகாத்துக் கொள்ள யுக்தி தேவை. நமக்குள் கோபம் வந்து விடக் கூடாது, இல்லாவிட்டால் நூறு மடங்கு பாவம் ஏற்பட்டு விடும். எவ்வளவு நல்ல அறிவை தந்தை குழந்தைளுக்குக் கொடுக்கிறார்! பாபா துல்லியமாக கல்பத்திற்கு முன்பு புரிய வைத்ததைப் போலவே இப்போதும் புரிய வைக்கிறார் என குழந்தைகளும் புரிந்து கொள்கின்றனர். வரிசைக் கிரமமான முயற்சியின்படி புரிந்து கொண்டபடிதான் இருப்பார்கள். தம் மீதும் கூட இரக்கம் காட்ட வேண்டும். மற்றவர் மீதும் இரக்கம் கொள்ள வேண்டும். சிலர் தம் மீது இரக்கம் கொள்வதில்லை, மற்றவர்கள் மீது இரக்கம் கொள்ளும்போது அவர்கள் முன்னேறி விடுகின்றனர், தாம் நின்று விடுகின்றனர். தாம் விகாரங்களின் மீது வெற்றி கொள்வதில்லை, பிறருக்குப் புரிய வைக்கின்றனர், அவர்கள் வெற்றியடைந்து விடுகின்றனர். இப்படிப்பட்ட அதிசயமும் நடக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

ஓம்சாந்தி. இனிமையிலும் இனிய குழந்தைகள் இந்த பாட்டைக் கேட்டீர்கள். இரண்டு உலகம் இருக்கிறது - ஒன்று பாவ உலகம், மற்றொன்று புண்ணிய உலகம். துக்கமான உலகம் மற்றும் சுகமான உலகம். சுகம் அவசியம் புது உலகில், புதிய கட்டிடத்தில் தான் இருக்க முடியும். பழைய கட்டிடத்தில் துக்கம் தான் இருக்கும். அதனால் தான் அதை இடித்து விடுவர். பிறகு புதிய கட்டிடத்தில் சுகமாக வசிப்பார்கள். பகவானை எந்த மனிதரும் தெரிந்து கொள்ளவில்லை என்பதை குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது அறிவீர்கள். இராவண இராஜ்யத்தின் காரணத்தினால் முற்றிலும் கல்புத்தியாக, தமோ பிரதான புத்தியுடையவர்களாக ஆகிவிட்டனர். தந்தை வந்து புரிய வைக்கின்றார் - என்னை பகவான் என்று கூறுகின்றனர், ஆனால் யாரும் அறியவில்லை. பகவானையே அறியவில்லையெனில் பிறகு எதற்கும் பயன்படாதவர்களாக ஆகிவிடுகின்றனர். துக்கத்தின் பொழுது தான் ஏ பிரபு, ஏ ஈஸ்வரனே! என்று கூறி அழைக்கின்றனர். ஆனால் அதிசயம் என்னவெனில் ஒரு மனிதரும் எல்லையற்ற தந்தையாகிய படைப்பவரை அறியவில்லை. சர்வவியாபி என்று கூறிவிடுகின்றனர், ஆமை, மீன் போன்றவைகளில் பரமாத்மா இருக்கின்றார் எனக் கூறுகின்றனர். இது பரமாத்மாவை நிந்தனை செய்வதாகும். தந்தைக்கு எவ்வளவு நிந்தனை செய்கின்றனர்! அதனால் தான் பகவானின் மகாவாக்கியம்

என்னவெனில் எப்பொழுது பாரதத்தில் எனக்கும், தேவி தேவதைகளுக்கும் நிந்தனை செய்து செய்து ஏணியில் கீழே இறங்கி தமோ பிரதானம் ஆகிவிடுகிறீர்களோ அப்பொழுது நான் வருகிறேன். நாடகத்தில் இந்த பாகத்தை நடிக்க மீண்டும் வந்தே ஆக வேண்டும் என்று குழந்தைகள் கூறுகின்றனர். இந்த நாடகம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டது என்று தந்தை கூறுகின்றார். நானும் நாடகத்தின் பந்தனத்தில் கட்டுப்பட்டு இருக்கிறேன். இந்த நாடகத்தி-ருந்து நானும் விடுபட முடியாது. பதீதமானவர்களை பாவனம் ஆக்குவதற்கு நானும் வந்தே ஆக வேண்டியிருக்கிறது. இல்லையெனில் புது உலகை யார் ஸ்தாபனை செய்வார்கள்? குழந்தைகளை இராவண இராஜ்யத்தின் துக்கத்தி-ருந்து விடுவித்து புது உல்கிற்கு யார் அழைத்துச் செல்வார்கள்? இந்த உலகில் பல செல்வந்த மனிதர்கள் இருக்கின்றனர், நாம் சொர்க்கத்தில் இருப்பதாக நினைக்கின்றனர், செல்வம் இருக்கிறது, மாளிகைகள் இருக்கின்றன, விமானம் இருக்கிறது, ஆனால் எதிர்பாராமல் யாராவது நோய்வாய்பட்டு விட்டால், திடீரென்று இறந்து விட்டால் எவ்வளவு துக்கம் ஏற்படுகிறது! சத்யுகத்தில் ஒருபொழுதும் அகால மரணம் ஏற்படாது, துக்கத்தின் விசயமே கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியாது, அங்கு ஆயுளும் அதிகமாக இருக்கும். இங்கு திடீரென்று இறந்து விடுகின்றனர். சத்யுகத்தில் இப்படிப்பட்ட விசயங்கள் இருக்காது. அங்கு எப்படி இருக்கும்? என்பதையும் யாரும் அறியவில்லை. அதனால் தான் தந்தை கூறுகின்றார் - எவ்வளவு அசுத்த புத்தியுடையவர்களாக ஆகிவிட்டனர்! நான் வந்து இவர்களை தூய்மையான புத்தியுடையவர்களாக ஆக்குகிறேன். இராவணன் கல்புத்தி உடையவர்களாக, அசுத்த புத்தியுடையவர்களாக ஆக்குகின்றான். பகவான் தூய்மையான புத்தியுடைவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார். தந்தை உங்களை மனிதனி-ருந்து தேவதைகளாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார். சூரியவம்சி மகாராஜா, மகாராணி ஆவதற்காக வந்திருக்கிறோம் என்று அனைத்து குழந்தைகளும் கூறுகிறீர்கள். இலட்சியம், குறிக்கோள் எதிரில் இருக்கிறது. நரனி-ருந்து நாராயணன் ஆக வேண்டும். இது தான் சத்திய நாராயணனின் கதையாகும். பிறகு பக்தியில் பிராமணர்கள் கதை கூறிக் கொண்டே இருக்கின்றனர். உண்மையில் யாரும் நரனி-ருந்து நாராயணனாக ஆவது கிடையாது. நீங்கள் உண்மையிலேயே நரனி-ருந்து நாராயணன் ஆவதற்காக வந்திருக்கிறீர்கள். உங்கள் இயக்கத்தின் குறிக்கோள் என்ன? என்று சிலர் கேட்கின்றனர். நரனி-ருந்து நாராயணன் ஆவது தான் எமது குறிக்கோள் என்று கூறுங்கள். ஆனால் இது ஒரு இயக்கமே கிடையாது. இது குடும்பம் ஆகும். தாய், தந்தை மற்றும் குழந்தைகள் இருக்கிறோம். நீங்கள் தான் தாய், தந்தை...... என்று பக்தி மார்க்கத்தில் பாடினீர்கள். ஏ தாய், தந்தையே! நீங்கள் எப்பொழுது வருவீர்களோ அப்பொழுது நாங்கள் உங்களிடமிருந்து சுகமான உலகை அடைகிறோம், நாங்கள் உலகிற்கு எஜமானர்களாக ஆகிறோம். இப்பொழுது நீங்கள் உலகிற்கு எஜமானர்களாக ஆகிறீர்கள் அல்லவா! அதுவும் சொர்க்கத்தில். இப்படிப்பட்ட தந்தையை பார்க்கின்ற பொழுது குஷியின் அளவு எவ்வளவு அதிகரிக்க வேண்டும்! அவரை அரைக் கல்பமாக ஹே பகவானே வாருங்கள்! நீங்கள் வந்தால் நாம் உங்களிடமிருந்து அதிக சுகம் அடைவோம் என்று நினைவு செய்தோம். இந்த எல்லையற்ற தந்தை எல்லையற்ற ஆஸ்தி கொடுக்கின்றார், அதுவும் 21 பிறவிகளுக்கு. தந்தை கூறுகின்றார் - நான் உங்களை தெய்வீக வம்சத்தினர்களாக ஆக்குகின்றேன். இராவணன் அசுர வம்சத்தினர்களாக ஆக்குகிறான். நான் ஆதி சநாதன தேவி தேவதா தர்மத்தை

ஸ்தாபனை செய்கிறேன். தூய்மையின் காரணத்தினால் அங்கு ஆயுளும் அதிகமாக இருக்கும். இங்கு போகிகளாக இருப்பதால் அகால மரணம் அடைந்து கொண்டே இருக்கின்றனர். அங்கு யோகத்தின் பலனாக ஆஸ்தி அடைந்திருப்பீர்கள். ஆயுளும் 150 ஆண்டுகள் இருக்கும். தனக்குரிய நேரத்தில் ஒரு சரீரத்தை விடுத்து மற்றொன்றை எடுப்பீர்கள். ஆக இந்த ஞானத்தை தந்தை தான் வந்து கொடுக்கின்றார். பக்தர்கள் பகவானை தேடிக் கொண்டிருக்கின்றனர், சாஸ்திரங்கள் படிப்பது, தீர்த்த யாத்திரை செல்வது - இவைகள் அனைத்தும் பகவானை சந்திக்கும் வழிகள் என்று நினைக்கின்றனர். இது வழியே கிடையாது என்று தந்தை கூறுகின்றார். வழியை நான் தான் கூறுவேன். குருடர்களுக்கு ஊன்றுகோலாக இருக்கக் கூடிய ஹே பிரபுவே! வாருங்கள், எம்மை சாந்திதாமம், சுகதாமத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று நீங்கள் கூறி வந்தீர்கள். ஆக தந்தை தான் சுகதாமத்திற்கான வழி கூறுகின்றார். தந்தை ஒருபொழுதும் துக்கம் கொடுப்பது கிடையாது. தந்தையின் மீது இவ்வாறு பொய்யான களங்கம் ஏற்படுத்தி விட்டனர். யாராவது இறக்கின்றனர் என்றால் பகவானை திட்ட ஆரம்பித்து விடுகின்றனர். நான் யாரையும் தண்டிப்பதோ அல்லது துக்கம் கொடுப்பதோ கிடையாது. இது அவரவர்களது பாகமாகும். நான் எந்த இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறேனோ அங்கு அகால மரணம், துக்கம் போன்றவைகள் ஒருபொழுதும் இருக்கவே இருக்காது. நான் உங்களை சுகதாமத்திற்கு அழைத்துச் செல்கிறேன். குழந்தைகளுக்கு மெய் சி-ர்க்க வேண்டும். ஆஹா, பாபா நம்மை புருஷோத்தமர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்! சங்கமயுகம் புருஷோத்தம யுகம் என்று கூறப்படுகிறது என்பது மனிதர்களுக்குத் தெரியாது. பக்தி மார்க்கத்தில் பக்தர்கள் புருஷோத்தம மாதம் என்று உருவாக்கி விட்டனர். உண்மையில் இருப்பது புருஷோத்தம யுகமாகும், இதில் தான் தந்தை வந்து உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களாக ஆக்குகின்றார். இப்பொழுது நீங்கள் புருஷோத்தமர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். அனைவரையும் விட உயர்ந்ததிலும் உயர்ந்த புருஷோத்தமர்கள் இலட்சுமி நாராயணன் ஆவர். மனிதர்கள் எதையும் புரிந்து கொள்வது கிடையாது. முன்னேறும் கலையில் அழைத்துச் செல்பவர் ஒரே ஒரு தந்தை ஆவார். ஏணிப்படி படத்தில் மற்றவர்களுக்குப் புரிய வைப்பது மிகவும் எளிதாகும். இப்பொழுது விளையாட்டு முடிவடைந்து விட்டது, வீட்டிற்கு திரும்புங்கள் என்று தந்தை கூறுகின்றார். இப்பொழுது இந்த பழைய சீ சீ சரீரத்தை விட வேண்டும். நீங்கள் முத-ல் புது உலகில் சதோ பிரதானமாக இருந்தீர்கள். பிறகு 84 பிறவிகள் எடுத்து தமோ பிரதான சூத்திரர்களாக ஆகிவிட்டீர்கள். இப்பொழுது மீண்டும் சூத்திரனி-ருந்து பிராமணர் களாக ஆகியிருக்கிறீர்கள். பக்தியின் பலன் கொடுப்பதற்காக இப்பொழுது தந்தை வந்திருக்கின்றார். சத்யுகத்தில் பலன் தந்தை கொடுத்திருந்தார். தந்தை சுகம் கொடுக்கும் வள்ளல் ஆவார். பதீத பாவனாகிய தந்தை வருகின்றார் எனில் முழு உலக மனிதர்கள் மட்டுமின்றி இயற்கையையும் சதோ பிரதானமாக ஆக்குகின்றார். இப்பொழுது இயற்கையும் தமோ பிரதானமாக இருக்கிறது. தானியம் போன்றவைகள் கிடைப்பதே கிடையாது. நான் இதையெல்லாம் செய்வதாக அவர்கள் நினைக்கின்றனர். அடுத்த ஆண்டில் அதிக தானியங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை. ஆனால் எதுவும் ஏற்படுவது கிடையாது. இயற்கையின் சீற்றங்களை யார் என்ன செய்ய முடியும். வெள்ளம் ஏற்படும், பூகம்பங்கள் நிகழும், வியாதிகள் ஏற்படும். இரத்த நதி ஓடும். இது அதே மகாபாரத யுத்தம் ஆகும். நீங்கள் உங்களது ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள்

என்று தந்தை கூறுகின்றார். நான் குழந்தைகளாகிய உங்களுக்கு சொர்க்கத்தின் ஆஸ்தி கொடுப்பதற்காகவே வந்திருக்கிறேன். மாயை இராவணன் சாபம் கொடுக்கிறது, நரகத்தின் ஆஸ்தியை கொடுக்கிறது. இந்த விளையாட்டும் உருவாக்கப் பட்டிருக்கிறது. தந்தை கூறுகின்றார் - நாடகப்படி நான் சிவாலயம் ஸ்தாபனை செய்கிறேன். இந்த பாரதம் சிவாலயமாக இருந்தது, இப்பொழுது விகார உலகமாக இருக்கிறது. விஷக்கட-ல் மூழ்கி ஏமாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றனர்.

பாபா நம்மை சிவாலயத்திற்கு அழைத்துச் செல்கிறார் என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். ஆக இந்த குஷி இருக்க வேண்டும் அல்லவா! நமக்கு எல்லையற்ற பகவான் கற்பித்துக் கொண்டிருக்கிறார். தந்தை கூறுகின்றார் - நான் உங்களை உலகிற்கு எஜமானர்களாக ஆக்குகிறேன். பாரதவாசிகள் தங்களது தர்மத்தைப் பற்றியே தெரிந்து கொள்ளவில்லை. நமது இனம் உயர்ந்ததிலும் உயர்ந்தது ஆகும், இதி-ருந்து தான் மற்ற இனங்கள் உருவாகின்றன. ஆதி சநாதன் என்பது எந்த தர்மம்? எந்த இனமாக இருந்தது? என்பதை புரிந்து கொள்வது கிடையாது. ஆதி சநாதனர்கள் தேவி தேவதா தர்மத்தின் இனத்தவர்கள், பிறகு இரண்டாவது நம்பரில் சந்திரவம்சி இனத்தவர்கள், பிறகு இஸ்லாமிய வம்சத்தின் இனத்தவர்கள். இந்த முழு மரத்தின் இரகசியம் வேறு யாரும் புரிய வைக்க முடியாது. இப்பொழுது எத்தனை இனங்கள் உள்ளன என்பதைப் பாருங்கள்! எத்தனை கிளைகள் உள்ளன! இது பல வகையான தர்மங்களின் மரமாகும், இந்த விசயங்களை தந்தை வந்து தான் புத்தியில் அமரச் செய்கின்றார். இது படிப்பாகும், இது தினமும் படிக்க வேண்டும். பகவானின் மகாவாக்கியம் - நான் உங்களுக்கு இராஜயோகம் கற்பித்து இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்குகிறேன். அழியக் கூடிய செல்வங் களை தானம் செய்வதன் மூலம் பதீத இராஜாவாக ஆகிவிட முடியும். நான் உங்களை அந்த அளவிற்கு பாவனம் ஆக்குகிறேன் அதாவது நீங்கள் 21 பிறவிகளுக்கு உலகிற்கு எஜமானர்களாக ஆகிறீர்கள். அங்கு ஒருபோதும் அகால மரணம் ஏற்படாது. தனக்குரிய நேரத்தில் சரீரத்தை விட்டு விடுவர். குழந்தைகளாகிய உங்களுக்குத் தந்தை நாடகத்தின் இரகசியத்தைப் புரிய வைத்திருக்கின்றார். சினிமா, நாடகம் போன்றவைகள் உருவாகியிருக்கிறது, ஆக இவைகள் மூலம் புரிய வைப்பதும் எளிதாகி விடுகிறது. இன்றைய நாட்களில் பல நாடகங்கள் உருவாக்குகின்றனர். மனிதர்களுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டு விட்டது. அவையனைத்தும் எல்லைக்குட்பட்டது, இது எல்லையற்ற நாடகமாகும். இந்த நேரத்தில் மாயையின் பகட்டு அதிகமாக இருக்கிறது. இப்பொழுது சொர்க்கமாகவே ஆகிவிட்டது என்று மனிதர்கள் நினைக்கின்றனர். முன்பு இவ்வளவு கட்டிடங்கள் கிடையாது. ஆக எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது! பகவான் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார் எனில் மாயையும் தனது சொர்க்கத்தை காண்பிக்கிறது. இவை அனைத்தும் மாயையின் பகட்டு ஆகும். இது வீழ்ச்சியடைய வேண்டும். எவ்வளவு சக்தி வாய்ந்ததாக மாயை இருக்கிறது! நீங்கள் அதனிடமிருந்து முகத்தை திருப்பிக் கொள்ள வேண்டும். தந்தை ஏழைப் பங்காளனாக இருக்கின்றார். செல்வந்தர்களுக்கு சொர்க்கம் ஆகும், ஏழைகள் பாவம் நரகத்தில் இருக்கின்றனர். ஆக இப்பொழுது நரகவாசிகளை சொர்க்கவாசிகளாக ஆக்க வேண்டும். ஏழைகள் தான் ஆஸ்தியை அடைவர். செல்வந்தர்கள் நாம் சொர்க்கத்தில் அமர்ந்திருப்பதாக நினைக்கின்றனர்.

சொர்க்கம், நரகம் இங்கு தான் இருக்கிறது. இந்த அனைத்து விசயங்களையும் இப்போது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். பாரதம் எவ்வளவு பிச்சைக்கார நாடாக ஆகிவிட்டது! பாரதம் தான் செல்வமிக்கதாக இருந்தது! ஒரே ஒரு ஆதி சநாதன தர்மம் இருந்தது! இப்பொழுதும் எவ்வளவு பழைய பொருட்களை கண்டுபிடித்துக் கொண்டே இருக்கின்றனர்! இத்தனை ஆண்டுகள் பழமையானது என்று கூறுகின்றனர். எலும்புகளைக் கண்டுபிடிக்கின்றனர், இலட்சம் ஆண்டுகளுக்கானது என்று கூறுகின்றனர். இலட்சம் ஆண்டிற்கான எலும்புகளை எப்படி வெளிக் கொணர முடியும்! பிறகு அதற்கு விலையும் எவ்வளவு அதிகமாக வைக்கின்றனர்!

நான் வந்து அனைவருக்கும் சத்கதி அளிக்கிறேன் என்று தந்தை புரிய வைக்கின்றார். இவரிடம் பிரவேசமாகி வருகிறேன். இந்த பிரம்மா சாகாரி ஆவார், இவரே பிறகு சூட்சுமவதனவாசி பரிஸ்தாவாக ஆகின்றார். அவர் அவ்யக்தமானவர் (நிராகார்), இவர் வியக்தமானவர் (சரீரதாரி). தந்தை கூறுகின்றார் - நான் பல பிறவிகளின் கடைசி யிலும் கடைசியில் வருகின்றேன், யார் நம்பர் ஒன் பாவனமாக இருந்தாரோ அவரே நம்பர் ஒன் பதீதமாக ஆகின்றார். நான் இவரிடத்தில் வருகின்றேன். ஏனெனில் இவர் தான் பிறகு நம்பர் ஒன் பாவனமாக ஆக வேண்டும். நான் பகவான் அல்லது இன்னாராக இருக்கிறேன் என்று இவர் ஒருபொழுதும் கூறியது கிடையாது. நான் இவரது உட-ல் பிரவேசம் செய்து இவர் மூலமாக அனைவரையும் சதோ பிரதானமாக ஆக்குகிறேன் என்று தந்தையும் கூறுகின்றார். நீங்கள் அசரீரியாக வந்தீர்கள், பிறகு 84 பிறவிகள் எடுத்து நடிப்பு நடித்தீர்கள், இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும் என்று தந்தை குழந்தைகளுக்கு புரிய வைக்கின்றார். தன்னை ஆத்மா என்று உணருங்கள், தேக அபிமானத்தை நீக்குங்கள். நினைவு யாத்திரையில் மட்டுமே இருக்க வேண்டும், வேறு எந்த கஷ்டமும் கிடையாது. யார் தூய்மையாக ஆவார்களோ, ஞானம் கேட்பார்களோ அவர்கள் தான் உலகிற்கு எஜமானர் களாக ஆவார்கள். எவ்வளவு உயர்ந்த பள்ளிக்கூடம்! கற்பிக்கக் கூடிய தந்தை எவ்வளவு அகங்காரமற்றவராகி பதீத உலகில், பதீத சரீரத்தில் வருகின்றார்! பக்தி மார்க்கத்தில் நீங்கள் அவருக்கு தங்கத்தினால் எவ்வளவு நல்ல நல்ல கோவில் கட்டுகிறீர்கள்! இந்த நேரத்தில் உங்களை சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆக்குகிறேன், பதீத சரீரத்தில் வந்து அமர்கிறேன். பிறகு பக்தி மார்க்கத்தில் நீங்கள் என்னை சோமநாத கோவி-ல் அமரச் செய்கிறீர்கள். தங்கம், வைரத்தினால் கோயில் கட்டுகிறீர்கள். ஏனெனில் நம்மை சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆக்குகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனால் கவனிப்பு செய்கிறீர்கள். இந்த அனைத்து இரகசியங்களையும் புரிய வைத் திருக்கின்றார். பக்தி முத-ல் கலப்படமற்று இருந்தது, பிறகு கலப்படம் ஆகிவிட்டது. இன்றைய நாட்களில் பாருங்கள், மனிதர்களுக்கும் பூஜை செய்து கொண்டிருக்கின்றனர்! கங்கைக் கரையில் சிவோஹம் என்று கூறி அமர்ந்து விடுகின்றனர். தாய்மார்கள் சென்று பாலாபிஷேகம் செய்கின்றனர், பூஜை செய்கின்றனர். இந்த தாதா கூட தானே செய்திருக்கின்றார், நம்பர் ஒன் பூஜாரியாக இருந்தார் அல்லவா! ஆச்சரியம் அல்லவா! தந்தை கூறுகின்றார் - இது ஆச்சரியமான உலகமாகும். சொர்க்கமாக எப்படி ஆகிறது? நரகமாக எப்படி ஆகிறது? அனைத்து இரகசியங்களையும் குழந்தைகளுக்குப் புரிய வைத்துக் கொண்டே இருக்கின்றார். இந்த ஞானம் சாஸ்திரங்களில் கிடையவே கிடையாது. அது தத்துவ சாஸ்திரங்களாகும். இது ஆன்மீக ஞானமாகும், இதை ஆன்மீகத் தந்தை

மற்றும் பிராமணர்களாகிய உங்களைத் தவிர வேறு யாரும் கொடுக்க முடியாது. மேலும் பிராமணர்களாகிய உங்களைத் தவிர வேறு யாரும் இந்த ஆன்மீக ஞானத்தை அடையவும் முடியாது. எதுவரை பிராமணன் ஆகவில்லையோ அதுவரை தேவதையாகவும் ஆக முடியாது. பகவான் நமக்கு படிப்பு கற்பிக்கின்றார், கிருஷ்ணர் அல்ல என்ற குஷி குழந்தைகளாகிய உங்களுக்கு அதிகம் இருக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்காண முக்கிய சாரம்:

1) மாயையின் பகட்டு மிக அதிகமாக இருக்கிறது, இதனிடமிருந்து தனது முகத்தை திருப்பிக் கொள்ள வேண்டும். நாம் இப்பொழுது புருஷோத்தமர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம், பகவான் நமக்கு கற்பிக்கின்றார் என்ற குஷியில் மெய் சி-ர்த்துப் போக வேண்டும்.

2) உலக இராஜ்ய பாக்கியம் அடைவதற்காக தூய்மையானால் போதும். எவ்வாறு தந்தை அகங்காரமற்றவராகி பதீத உலகில், பதீத சரீரத்தில் வருகின்றாரோ அவ்வாறு பாப்சமான் அகங்காரமற்றவராகி சேவை செய்ய வேண்டும்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தனது பையை ஞான இரத்தினங்களால் நிரப்பிப் பிறகு தானமும் செய்ய வேண்டும். யார் தானம் செய்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் பிரியமானவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு அளவற்ற குஷி இருக்கும்.

2) உயிர்மூச்சைத் தரும் பாபாவை மிகுந்த அன்போடு நினைவு செய்து கொண்டு அனைவருக்கும் சாந்தியின் தானம் கொடுக்க வேண்டும். சுயதர்ஷனச் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டே ஞானக்கடலாக ஆக வேண்டும்.

1. ஞான சிந்தனை செய்து அதீந்திரிய சுகத்தில் இருக்க வேண்டும். யாருடனும் மூர்க்கத்தனமாகப் பேசக் கூடாது. யாராவது கோபத்துடன் பேசினால் அவரிடமிருந்து ஒதுங்கி விட வேண்டும்.

2. பகவானின் வாரிசு ஆவதற்காக முதலில் அவரை வாரிசு ஆக்க வேண்டும். புத்திசாலிகளாகி தமது அனைத்தையும் தந்தைக்கு சமர்ப்பணம் செய்து பற்றுதலை நீக்க வேண்டும். தம் மீது தாமே இரக்கம் காட்ட வேண்டும்.

வரதானம் : ஒளி உடல் மூலமாக சேவை செய்து கர்ம பந்தனங்களி-ருந்து விடுபட்டு டபுள் லைட் ஆகுக

எப்படி இந்த மானுடல் மூலமாக ஈஸ்வரிய சேவையில் இணைந்துள்ளீர்களோ அவ்வாறே தனது ஒளி உடல் மூலமாக இறுதி செய்தி தருவதற்கான சேவையும் இணைந்தே செய்யுங்கள். பிரம்மா பாபா மூலமாக ஸ்தாபனை வளர்ச்சி அடைந்தது. அவ்வாறே இப்போது உங்களுடைய இணைந்த ரூபத்தின் மூலமாக

சாட்சாத்காரத்தின் செய்தி கிடைக்கும் சேவை செய்யுங்கள். ஆனால் இந்த சேவை செய்வதற்காக செயல்கள் பல செய்த பொழுதும் எந்த விதமான கர்ம சுமையின்றி சதா டபுள் லைட் வடிவத்தில் இருங்கள்.

சாட்சி பார்வையாளராக ஆகி உயர்ந்த நிலை மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்தி கொடுக்கக் கூடிய தந்தைக்கு சமானமான அவ்யக்த ஃபரிஷ்தா ஆவீர்களாக.

நடந்தாலும் சென்றாலும் எப்பொழுதும் தன்னை நிராகாரி ஆத்மா மற்றும் செயல்கள் செய்யும் பொழுது அவ்யக்த ஃபரிஷ்தா என்று உணர்ந்து இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் குஷியில் மேலே பறந்து கொண்டே இருப்பீர்கள். ஃபரிஷ்தா என்றால் உயர்ந்த நிலையில் இருப்பவர். இந்த தேகத்தின் உலகத்தில் எது வேண்டு மானாலும் கடந்து சென்று கொண்டு இருக்கட்டும். ஆனால் சாட்சி பார்வையாளராக ஆகி அனைத்து பாகங்களையும் பார்த்து கொண்டே இருங்கள் மற்றும் சக்தி கொடுத்து கொண்டே இருங்கள். இருக்கையில் இருந்து இறங்கி சக்தி கொடுக்கப் படுவது இல்லை.உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து விருத்தி உள்ளுணர்வு, திருஷ்டி பார்வை மூலமாக சகயோகத்தின் சகாஷ் சக்தி கொடுங்கள் .மிக்ஸ் கலப்படமாக இருந்து அல்ல. அப்பொழுது எந்த ஒரு விதமான வாயு மண்டலத்தில் இருந்தும் (ஸேஃப்) பாதுகாப்பாக இருந்து அவ்யக்த ஃபரிஷ்தா பவ என்ற வரதானம் உடையவராக இருப்பீர்கள்.

ஒருவருடன் அனைத்து சம்பந்தங்களையும் பேணக்கூடிய அனைத்துப் பற்றுக்கோடுகளில் இருந்தும் விடுபட்ட சம்பூர்ண ஃபரிஸ்தா ஆகுக.

எப்படி ஒரு பொருளை உருவாக்கும் போது அது உருவாகி, தயாராகி விட்டால், அது தனது பற்றுக்கோட்டை விட்டு விடுகிறது. அது போல் எந்த அளவு சம்பன்ன ஸ்டேஜின் சமீபமாக வந்து கொண்டே இருக்கிறீர்களோ, அந்த அளவு அனைவரிடம் இருந்தும் விலகிக் கொண்டே செல்வீர்கள். எப்போது அனைத்து பந்தனங்களில் இருந்தும் உள்ளுணர்வு மூலம் விலகி விடுகிறீர்களோ, அதாவது எவரிடத்தும் பற்றுதல் இல்லாமற் போகிறதோ, அப்போது சம்பூர்ண ஃபரிஸ்தா ஆவீர்கள். ஒருவருடன் அனைத்து உறவுகளையும் கடைப்பிடிப்பது தான் சென்று சேர வேண்டிய இலக்காகும். இதன் மூலம் தான் கடைசி ஃபரிஸ்தா வாழ்க்கையின் குறிக்கோள் சமீபத்தில் அனுபவமாகும். அப்போது புத்தி அலைவது நின்று போகும்.

சுலோகன்: அன்பு என்பது அத்தகைய ஒரு காந்தமாகும் --

தன்னுடைய சக்திசாலி மனதின் மூலம் சகாஷ் கொடுக்கும் சேவை செய்யுங்கள்

எனக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பே கிடைப்பதில்லை என்று ஒருவரும் சொல்ல முடியாது. ஒருவரும் உங்களுக்கு கூறாத போதும் மனதால் சுற்றுச் சூழலை சுகமயமாக்கும் உள்ளுணர்வு மற்றும் மனோ நிலையுடன் சேவை செய்யுங்கள். உடல் நோய்வாய்ப்பட்ட போதும் வீட்டி-ருந்தபடியே சகயோகி ஆகுங்கள். அதற்காக மனதில் சுத்த எண்ணங்களின் சேமிப்பை மட்டும் வையுங்கள். சுபபாவனைகளால் நிரம்பியிருங்கள்.

14.01.2025, காலை முரளி, ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! உங்கள் பார்வை சரீரங்களின் மீது செல்லக் கூடாது, தன்னை ஆத்மா எனப் புரிந்து கொள்ளுங்கள், சரீரங்களைப் பார்க்காதீர்கள்.

கேள்வி: ஒவ்வொரு பிராமணக் குழந்தையும் எந்த இரண்டு விஷயங்களின் மீது கவனம் கொடுக்க வேண்டும்?

பதில்: 1. படிப்பின் மீது, 2. தெய்வீக குணங்களின் மீது. பல குழந்தைகளிடம் கோபத்தின் அம்சம் கூட இருப்பதில்லை, சிலரோ கோபத்தில் வந்து மிகவும் சண்டையிடுகின்றனர். நாம் தெய்வீக குணங்களை தாரணை செய்து தேவதையாக வேண்டும் என்று குழந்தைகள் சிந்திக்க வேண்டும். ஒரு போதும் கோபத்தில் வந்து பேசக்கூடாது. பாபா சொல்கிறார் - எந்த குழந்தைக்குள்ளாவது கோபம் இருக்கிறது என்றால் அவர்கள் பூதநாதன் - பூத நாயகி ஆவார்கள். இப்படிப்பட்ட பூதங்களிடம் பேசவும் கூடாது

பாடல்: அதிர்ஷ்டத்தை எழுப்பி வந்தேன். . .

தங்களது சக்திசாலி மனசா மூலமாக சகாஷ் (சக்தி) கொடுக்கும் சேவை செய்யுங்கள்.

தங்களது சுபபாவனை, சிறந்த நல்விருப்பம், சிறந்த உள்ளுணர்வு, சிறந்த அதிர்வலைகள் மூலமாக எந்த ஒரு இடத்தில் இருந்தாலும் மனசா மூலமாக உங்களால் அனேக ஆத்மாக்களுக்கு சேவை செய்ய முடியும். இதற்கான விதியாவது - லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி விடுவது. இதில் ஸ்தூல சாதனங்கள்,சான்ஸ் (வாய்ப்பு) அல்லது நேரத்தின் பிரச்சினை இல்லை. லைட், மைட்- ஒளி மற்றும் சக்தியில் நிறைந்திருப்பதற்கான அவசியம் மட்டுமே உள்ளது.

15.01.2025, காலை முரளி, ஓம் சாந்தி பாப்தாதா, மதுபன்

இனிமையான குழந்தைகளே! குழந்தைகளாகிய உங்களது புத்தியை தூய்மையாக்குவதற்காக தந்தை வந்திருக்கின்றார், எப்போது தூய்மையாகின்றீர்களோ அப்போது தான் நீங்கள் தேவதையாக ஆக முடியும்.

கேள்வி: இந்த நாடகத்தில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட திட்டம் என்ன? இதி-ருந்து தந்தையும் கூட விடுபட முடியாது?

பதில்: ஒவ்வொரு கல்பமும் தந்தை தனது குழந்தைகளிடத்தில் வந்தே ஆக வேண்டும், பதீதமான, துக்கமான குழந்தைகளை சுகமானவர்களாக ஆக்கியே தீர வேண்டும் - இந்த திட்டம் நாடகத்தில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த பந்தனத்தி-ருந்து தந்தையும் விடுபட முடியாது.

கேள்வி: படிப்பு கற்பிக்கும் தந்தையின் முக்கிய விசேஷத்தன்மை என்ன?

பதில்: அவர் மிகவும் அகங்காரமற்றவராகி பதீத உலகில், பதீத சரீரத்தில் வருகின்றார். தந்தை இந்த நேரத்தில் உங்களை சொர்கத்திற்கு எஜமானர்களாக ஆக்குகின்றார். பிறகு நீங்கள் அவருக்கு துவாபரயுகத்தில் தங்கக் கோயில் கட்டுகிறீர்கள்.

பாட்டு: இந்த பாவம் நிறைந்த உலகி-ருந்து .....

அது நிந்தனை செய்பவைரையும் கூட அருகில் கொண்டு வந்து விடும்.

தனது சக்திசாலி மனதின் மூலம் சகாஷ் கொடுப்பதற்கான சேவை செய்யுங்கள்

மனசா சேவைக்காக மனம், புத்தி, வீணானவற்றை யோசிப்பதிலிருந்து விடுபட வேண்டும். மன்மனாபவ மந்திரத்தின் சகஜ சொரூபம் ஆக வேண்டும். எந்த சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு சிரேஷ்ட மனம், அதாவது சங்கல்பம் சக்திசாலியாக உள்ளதோ, சுப பாவனை, சுப விருப்பம் உள்ளவராக இருக்கிறார்களோ, அவர்கள் மனதின் மூலம் சக்திகளை தானம் செய்ய முடியும்.